உ

சிவமயம்.

திருப்பனசை என்னும்

நாட்டரசன்கோட்டை

தனவணிக குலதிலகராகிய திருவாளர்

## அரு. சு. கண.

## கண்ணப்ப செட்டியாரவர்கள்

மீது பாடிய

# காதல்

இது

கும்பகோணம் "வித்வான்"

சுப. வெள்ளைவாரணம்பிள்ளை அவர்கள்

குமாரர்

## கலியாணசுந்தரம் பிள்ளை

இயற்றியது.

ஜனானுகூல அச்சுக்கூடம்

திருச்சிறாப்பள்ளி

—

1929



திருவாளர் அரு. சு. கண. கண்ணப்ப செட்டியார்

நாட்டரசன்கோட்டை



# சாத்துக்கவிகள்.

மகிபாலன்பட்டி பண்டிதமணி

திருவாளர் மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்

இயற்றியது.

திருப்பனசை வாழ்வணிகச் செல்வன் புலவர்
விருப்பமுறுங் கண்ணப்ப வேட்கு—கருத்தமைத்துக்
காத லிசைத்தான் கலியாண சுந்தரனென்
றோது தமிழ்ப்புலவ னோர்ந்து.

திரிசிரபுரம்

பிஷப் ஹீபர் காலேஜ், தமிழ்ப் பண்டிதர்

திருவாளர்

ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

இயற்றியது.

---

முன்னாளிற் காதல் மொழிந்தார் மிகவரியர்
இந்நாளிற் கல்யாண சுந்தரனும்—நன்னுமன்
தென்பனசை வாழ்செல்வக் கண்ணப்பச் செம்மலுக்கே
அன்புடனற் காதலிசைத் தான்.

உரத்தூர்

தமிழ் வித்வான்

திருவாளர் கோ. வைத்தியலிங்கப்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

---

யாணர்ப் பொருள்பரப்பி யின்மொழியாற் றென்பனசை
மாணப் பெருந்தகைகண் ணப்பன்மேற்—பூணக்
கவிஞன் கலியாண சுந்தரனூற் காதல்
புவியின் மொழிந்தான் புகழ்ந்து.

---

நாட்டரசன்கோட்டை

ஸ்ரீ உ. வே. "கம்பராமாயணப் பிரசாரகர்"

திருவாளர்

ப. ஸ்ரீ. இராமையங்காரவர்கள்

இயற்றியது.

---

மேக்குப் பிறைக்கலைபோன் மேலோங்கு செந்தமிழின்
வாக்குயருங் காதற்பா வாமிதனை—நோக்கினேன்
கண்ணப்ப வேண்மீது கல்யாண சுந்தரனே
யெண்ணி யிசைத்தா னினிது.

---

சிவகங்கை தமிழ்ப் பண்டிதர்

திருவாளர் மு. ப. கணபதியாபிள்ளை யவர்கள்

இயற்றியது.

---

வண்டினம்பா டிடமயில்க ளாட வன்னம்
வனசமலர் மீதிருந்து மகிழ்ந்து நோக்குந்
தண்டலைசூழ் தென்பனசைத் தலத்தில் வாசன்
றருக்கரத்தன் சீரகத்தார் தழைதிண்டோளன்
கண்டனைய சொன்மாதர் மையல் கொள்ளுங்
கண்ணப்ப பூபனின்மேற் காத லாக
மண்டலத்தார் புலவரெலாம் வாழ்த்தச் செஞ்சொன்
மருவியசீர்க் காதற்பா வளமிக் கூர

தந்தவன்யா ரெனிற்றமிழி லமுத வாக்கிற்
றருவெள்ளை வாரணவேள் தவத்திற் சார்ந்து
வந்தவனற் குணசாந்தன் பொறுமை யாளன்
வள்ளுவனார் குறளடிக்கும் மகிமை வாயச்
சந்ததமு மூலவினர்தந் தந்தை நோன்பைச்
சாற்றிடச்செய் தரிமருகன் சாமி நாதன்
கந்தனிரு கழலிணையே கருதும் யோகக்
கலியாண சுந்தரப்பேர்க் கனதை யோனே.

---

உறையூர் சைவசித்தாந்த சபைத் தனசாலாதிபரும், ஸ்ரீமீனாக்ஷி
சுந்தரவித்யாசாலைத் தலைவரும், பூவாளூர், திருவானைக்கா
சைவசித்தாந்த சங்கங்களின் உப அக்கிராசனாதிபதியும்,
கு. தா. லாலாப்பேட்டைச் சித்தாந்த ஞானப்பிரகாச
சபைத் தலைவரும், சென்னைச் சைவ சித்தாந்த
மகாசமாஜத்தின் அத்தியக்ஷரும் ஆகிய
சித்தாந்த சைவப் பிரசாரகர்,

உறையூர்

திருவாளர் தே. பெரியசாமி பிள்ளை யவர்கள்

இயற்றியது.

---

மன்னுபுகழ்க் குடந்தைநகர் வெள்ளைவா ரணப்புலவன்
[மகிழ்வி னீன்ற
சுன்னன்மொழிக் கலியாண சுந்தரநா வலனியலார்
[காதல் சொற்றுன்
தென்னவநாட் டுறுபனைசைச் செல்வவை சியர்குலத்தின்
[றீப மான
மன்ன னுயர் கண்ணப்ப வள்ளலேற் றிருநிதியம்
[வழங்கி னானல்

---

சிவகங்கை ஜமீன் வேம்பத்தூர் சங்கவித்வான்களிலொருவராகிய
சாமாவையரென்ற ஆண்டியையரவர்கள் புத்திரர்
திருவாளர் சௌந்தர பாரதியாரவர்கள்
இயற்றியது.

மாமாது வாழ்பனசை மன்னுங்கண் ணப்பனெனுஞ்
சீமான்மேற் காதலொன்று செப்பினன்—தேமானுஞ்
சந்ததமுங் கந்தனருள் சாருங் கலியாண
சுந்தரம் பிள்ளைமகிழ்ந் து.

---

நாட்டரசன்கோட்டை
"ஜோஸ்யம்" திருவாளர் சீதாராமையங்காரவர்கள்
இயற்றியது.

காமேவு தென்பனசைக் கண்ணப்ப வேண்மீது
நாமேவு காதலன்பா நல்கினன்—தூமேவு
சொற்சுவையோன் கல்யாண சுந்தரப்பேர் நாவலவன்
நற்கலையார் நோக்க நயந்து.

---

திரிசிரபுரம் ஸெயன்ட் ஜோசப் கல்லூரித் தமிழ் பண்டிதர்
திருவாளர் மு. நடேச முதலியார் அவர்கள்
இயற்றியது.

தென்பனசை வாழ்வணிகச் செல்வன்கண் ணப்பேந்த்ரன்
நன்மை பனைத்தும் நவிலுறும்—இன்பமிகு
காத லுரைத்தான் கலியாண சுந்தரவேள்
காதன் மிகவே கனிந்து

இந்நூலாசிரியர் பிதாவாகிய

திருவாளர்

## சு. ப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள்

இயற்றியது.

---

மருப்பனசை யோகமுலை மடவியரம் படைவாளி மலர்வார் விற்பூங்
கருப்பனசை யுறுகளிறு கடன்முரசு கொடி மகரக் காளை வெள்ளிப்
பொருப்பனசை வறாயோகி ரியப்பொருவேள் மதன்குடிகொள்
[பொதும்ப ரோங்கு
திருப்பனசைத் தனவணிகா திபன்சுப்ர மணியனருள் செல்வன்
[மாதோ

கற்றவர்க்கோர் கற்பகம்வெங் கலியிருட்குக் கதிர்ச்சுடர் தண்
[கருணை நாடி
யுற்றவர்தம் வறியபிணிக் கோங்குமலைச் சஞ்சீவி யொன்றார்க் கேறு
நற்றரும வேலியெனுங் கண்ணப்ப வேண்மீது நனிசீர்க் காதல்
சொற்றனன்வண் குடந்தைநகர்க் கலியாண சுந்தரமெய்த்
[தூயோன் றானே

உ
சிவமயம்.

# காதல்.

---

விநாயகர் காப்பு.
வெண்பா.

வையம் புகழ்பனசை வாழுங்கண் ணப்பவள்ளல்
துய்யதமிழ்க் காதல் சொலத்துணையாம்—மெய்யர்க்குத்
தந்தமா தங்கமுகத் தான்வந் தருளுமொரு
தந்தமா தங்கமுகத் தான்.

கணேசர் துதி.

சீரார் திருமகள்வாழ் தென்பனசை நாடாளும்
பேரார்கண் ணப்பப் பிரபலன்றன் காதல்சொல
தந்தனைய சிற்றிடைமா தங்கிசிவ சத்தியுமை
தந்தவொரு தந்தனிரு தாண்மலரை நான்மறவேன்.

சொக்கலிங்கேசர் துதி.

மிக்க புகழ்படைத்த மேதினியோர் கொண்டாடத்
தக்கவனுங் கண்ணப்பத் தார்வேந்தன் காதல்சொல
திக்கெலாம் போற்றுந் திருவால வாயிலுறை
சொக்கேசர் மீனாக்ஷி தூயமலர்த் தாள்பணிவாம்.

முருகர் துதி.

காரோங்கு செங்கைக் கருணா கரனெங்குஞ்
சீரோங்கு கண்ணப்பச் செம்மலது காதல்சொல
அம்மான் மருகன் அரவணிபெம் மான்மகனற்
செம்மான் மகண்மருவு சேவலன்பொற் றாள்பணிவாம்.

தேசிவிநாயகர் துதி.

தேசமெலா மும்புகழுஞ் செம்மலென வேதிகழும்
நேசமிகு கண்ணப்ப நீதிபரன் காதல்சொல
காசினியிற் சீர்படைத்த காவளருந் தென்பனசைத்
தேசிவி நாயகன்பொற் சேவடியைச் சென்னிவைப்பாம்.

## சோழீசர் துதி.

மண்டலத்தோர் கொண்டாடு மன்னும் புகழ்படைத்த
கொண்டலெனுங் கண்ணப்பக் கொற்றவன்றன் காதல்சொல

மின்பரவு பொன்புரிசை மேவுமணி மாடமலி
தென்பனசைச் சோழீசர் செய்யமலர்த் தாள்பணிவாம். (10)

## வேங்கடேசர் துதி.

மாந்தளிர்நேர் மேனி மடவார் மயல்கொளெழில்
வாய்ந்தபுகழ்க் கண்ணப்ப மன்னவன்றன் காதல்சொல

மாலைதர வான்கதிர் மறைத்தவேங்க டேசனெனும்
மாலைப் பதம்பணிந்து வாழ்த்திப் பரவுவமே.

## கண்ணுடையம்மை துதி.

மன்பதையோர் வாழ்த்தும் மணிமகுட வர்த்தனனென்
றின்பொடுரை கண்ணப்ப வேந்தனுயர் காதல்சொல

செங்கமல வாவிதிகழ் தென்பனசை நன்னகர்வாழ்
துங்கவருட் கண்ணம்மை தூயமலர்த் தாள்பணிவாம்.

## கலைமகள் துதி.

வான்முகிலுங் கற்பகமும் மன்னுஞ்சிந் தாமணியுந்
தேனுவுமே நாணத் தினங்கொடுப்போன் காதல்சொல

நாமகளை வேதனது நாவிலுறை தேவிதனைப்
பாமகளை வெண்கமலப் பைந்தொடியைச் சிந்தைசெய்வாம்.

## அவையடக்கம்.

உம்பருல கோர்புவியோ ரோதும் புகழ்க்குடந்தைக்
கும்பலிங்கர் மங்களபொற் கோகனகத் தாள்பணிவோன்

உத்தமரை நாடுகுண மோங்குவெள்ளை வாரணமால்
மெய்த்தவத்தி னுலிந்த மேதினியில் வந்துதித்தோன்.

நற்றா மரைமேவு நல்லனத்தி னீர்மையுற்ற
கற்றாரை வாழ்த்துங் கலியாண சுந்தரன்யான்

மன்னுபுகழ்க் கண்ணப்ப மாவேந்தன் காதல்தனைப்
பன்னுகவி வாணர்முன்பு பாடத் துணிந்ததுதான்

வண்ணக் கருடனுக்கு வான்குருவி தானிகரா
விண்ணதனை நோக்கி விரைந்தோங்கிச் செல்வதொக்கும்

வன்ன மலர்க்காவின் மாங்குயிலோ சைக்கிணையா
மன்னு கருங்காகம் வாய்விட் டரற்றலொக்கும்.

---

## தசாங்கம்.

### மலை

வானமுதைத் தேவர் வழங்கிச் செழுந்தமிழின்
தேனமுதை யேற்கின்ற சீர்திகழுந் தென்மலையான்

### நதி

வீடேற மாட்டாத வீணமணர் வேதையுற
ஏடேறு வையை யெனுந்தெய்வ மாநதியான்

### நாடு

கன்னமத யானை கறித்த கரும்பிரசஞ்
செந்நெற் பயிர்வளர்க்குந் தென்பாண்டி நாடுடையான்

### நகர்

செங்கமலை வெண்கமலை சேர்ந்துமகிழ் வாசநிதந்
தங்கிவளர் துங்கத் தடம்பனசை மாநகரான்

### மாலை

திங்கணுதன் மங்கையர்கள் செப்பிணையை யொப்புமுலைச்
செங்களபந் தோய்மார்பிற் சீரகப்பூ மாலையினான்.

### யானை

அடையலர்க ளுடையமுடி யடநெடிய படைகொளம
ரிடைநெருடு புடவியதி ரிடநடைகொள் கடகரியான்

### குதிரை

சடசடென வடகுவடு தடவரைக ளொடுசரிய
படவரவி னுடலநெளி படநடன மிடுபரியான்

### முரசு

வார்கடலுங் கார்முகிலும் வாயடங்க வேயொலித்துத்
தேரலர்க டங்கள் செவியடைக்கும் வார்முரசான்

### கொடி

மேதினியிற் றெவ்வரெனும் வேழம் வெருண்டோட
ஓதுபுகழ்ச் சிங்க வுருத்தீட்டுங் கேதனத்தான்

### ஆணை

வாதுபுரி வார்தம் மதமடக்கி மாமனுநூல்
நீதிதனை யெங்கும் நிலைநிறுத்து மாணையினான்

### குடை

சங்குதங்கு துங்கத் தடங்கடல்சூழ் பாரின்மிசை
பொங்குங் கலியிருளைப் போக்குமதி வெண்குடையான்

### படை

மாற்றலர்க டங்கண் மனந்திகைக்க வேழ்கடலுஞ்
சீற்றமுற வந்ததுபோற் சேரும் பெரும்படையான்

### கோட்டை.

தானவனுக் காவிண் டலமளந்த மாலடிபோல்
வான முகடளக்கும் வஜ்ரமணிக் கோட்டையினான்

## வாசல்வளம்.

ஆழிபுடை சூழுலகும் அண்டர்பதி யும்மதிர
ஏழிசைகீ தம்பல் லியமுழங்கும் வாசலினான்

மேனகைய ரம்பையரும் வெள்கிவிண்ணி லேயொதுங்க
ஆன கணிகையர்க ளாடல்புரி வாசலினான்

சந்ததமு மாதுலர்க டங்கள் கலியகல
வந்தடிக்குங் கண்டா மணியசையும் வாசலினான்

தெண்டிரைசூ ழும்புவியின் தேசத் தரசரெலாங்
கண்டுகொள்ள நித்தியமுங் காத்திருக்கும் வாசலினான்

மாற்றலர்கள் சென்னி வணங்கிநிதங் கைகூப்பிப்
போற்றித் திறையளிக்கும் பொற்கதவ வாசலினான்

மாணிக்கம் பச்சை வயிரமொளிர் செம்பவளம்
ஆணிப்பொன் முத்தம் அமைந்தமணி வாசலினான்

பைந்தருவு மாமணியும் பங்கிருப்பப் பங்கயத்தின்
செந்திருவு நாமகளுஞ் சேர்ந்துறையும் வாசலினான்

## நாயகவாசி

தென்பனசைக் கண்ணுடைய தேவியிரு தாண்மலரை
அன்புடனே சிந்தித் தனவரத முந்துதிப்போன்

அன்னைபிதா வாசிரிய ரானபெரி யோர்கடமை
தன்னுளத்தில் வைத்தொழுக்கத் தாலுயர்ந்த சற்குணவான்

நல்லறத்தி லேநின்று நாளும் விருந்தோம்பி
இல்லறத்திற் கீர்த்தியுட னின்பமுற வாழ்மகிபன்

எச்சமயங் கட்குமுயர் வென்றுரைசெய் கின்றசைவ
மெய்ச்சமயத் துற்றொழுகு மேன்மைமிகு நீர்மையினான்

அந்தணர்க்கு மாதுலர்க்கும் ஆனகவி வாணர்கட்குஞ்
சிந்தை மகிழ்ந்தளிக்குஞ் சீரா ரிருநிதியான்

செப்புநா லெட்டறத்தைத் திண்புவியி லோங்கவைத்த
சுப்ரமண்ய பூபதியின் தூயதவத் தாலுதித்தோன்

பாரின்மிசை வான்முகிலும் பைந்தருவு நாணமுறப்
பாரி யெனத்தினமும் பைம்பொனருள் செங்கரத்தான்

மாற்றலரெ னும்பெரிய வாரியல றக்கடையும்
போற்றுபுகழ் மந்தரப்பொற் பூதரநேர் திண்புயத்தான்

மானார் விழிகளெனும் வண்டினங்கள் மொய்ப்பநறுந்
தேனா ரலங்கல்செறி திண்டோண் மணிமார்பன்

சேண்பரிதி திங்கள் திசைதவறி மாறிடினும்
மாண்புமிகு தன்னுடைய வாய்மைமொழி மாறாதான்

முந்நீரை யுண்ட முனியரசும் பூவேந்து
சென்னியனும் மெச்சுதமிழ்த் தேர்ச்சியு மதியுமுற்றோன்

குன்றாக் குடிக்குமரன் கோதில்புகழ்ச் சந்நிதியிற்
குன்றா மணிவிளக்கு கோலமுறச் செய்துவைத்தோன்

எப்பாரு மேத்தும் எழிற்கும்ப கோணநகர்க்
கப்பானேர் தென்றிசையி லைந்துகுரோ சத்துற்ற

ஆலங் குடிப்பதிவா ழாப்த சகாயரெனும்
ஆலங் குடித்தும்ப ரைக்காத்த வீசருக்கு

ஆரமுதங் கொண்டே யபிஷேகஞ் செய்துறவச்
சீரமுத மல்கித் திகழ்வதனா லேயாங்கு

துங்கமிர்த வாவியெனத் தோயுந் தடந்திருத்திப்
பொங்கு பெரும்புகழும் புண்ணியமும் பெற்றுயர்ந்தோன்

காண்கவரு மேற்றானைக் கல்லடியு மேற்றானை
வேண்மதனை நீற்றானை மெய்யினில்வெண் ணீற்றானை

பாலமதிற் கண்ணானைப் பங்கயன்மாற் கண்ணானைச்
சீலருளக் கண்ணானைத் தீங்கினரைக் கண்ணானை

செங்கைதனிற் றீயானைத் தெவ்வர்புரந் தீய்த்தானை
அங்குமுத வாயானை யன்பருக்கு வாய்த்தானை

வேதச் சிலம்பினைத்தன் மெல்லடியிற் சேர்த்தானைப்
போதச் சிலம்பிக்குப் புன்பிறவி தீர்த்தானை

தங்கவரை வில்லானைச் சாற்றவரை வில்லானைப்
பொங்குறுமெய் யன்புடனே பூசிக்கும் பூசிதனை

செல்வமொடு கல்விதிகழ் தேவைநகர்ச் செல்லப்ப
நல்வணிக வேளினது நண்ணுமெய்த் தவத்துதித்த

பூமானைப் பொன்னூர் புயனைப் பழநியப்பச்
சீமானை யன்பு சிறந்துறுநட் பாகவுற்றோன்

மின்னார் மனங்கவரும் மிக்கவெழி லான்ராஜ
மன்னார் குடியில் வளருநிதி வர்த்தகத்தான்

விண்ணாட் டவரும் விரும்பிநித மும்புகழ்ந்து
கண்ணாட் டத்தக்க கனநாட்டுக் கோட்டையினான்

அண்டர்புகழ் வேதா கமங்களெலாங் கற்றுணர்ந்த
தொண்ட ரினிதேத்துந் தூயசிவ கோத்திரத்தான்

விண்டலத்தி னாளும் மிளிருங் கதிரவன்போல்
மண்டலத்தி லோங்கும் வணிக குலதிலகன்

வாரிதியிற் றோன்றியபான் வார்சடையிற் றங்கியிந்தப்
பாரின்மிசை யின்பம் பயக்கும் மதிமரபான்

ஓது மெழுகோவிற் கோங்கும் மதாணியெனுங்
கோதிலிளை யாற்றக் குடிக்கோ விலையுடையான்

மன்னுங் கலாமடந்தை வாழுங் கலாமடத்திற்
றுன்னுங் கலாமயின்மேற் றோன்றிவரு தோன்றலன்ன

மோனமிகு மானமுயர் முத்தர்மர பிற்றோன்றி
ஞானசி காமணியாய் நண்ணியமெய்ப் புண்ணியனை

சற்குருவாக் கொண்டுளத்திற் சார்ந்துறுமெய் யன்புடனே
பொற்கமலச் சேவடியைப் போற்றித் தினம்பணிவோன்

## தலைவன் கொலுவிருத்தல்.

பன்னுங் கலைகள் பயின்றறிந்த சுப்ரமண்ய
மன்னவன்றன் மைந்தனென வந்தமகு டாதிபதி

நீதிபதி யாய்க்கீர்த்தி நீணிலத்தி னாட்டிமன்ன
ராதிபதி யாகவிளங் கண்ணல்கண் ணப்பமுகில்

வாழ்வெய்தி யென்றும் மனுநீதி மேலோங்க
ஆழிபுடை சூழிலகை யாளுந் தினத்தொருநாள்

ஓதரிய மாட்சிமிக வோங்குவையை மாநதியின்
சீதநீ ராடித் திருநீறு தானணிந்து

மூவா முதல்வோனை முத்தர்பணி யுத்தமனைத்
தேவாதி தேவனையத் தேவர்சிறை மீட்டோனை

தந்தைக் குபதேசந் தான்மொழிந்த தேசிகனைப்
பந்தமறுத் தின்பம் பயக்கும் பராபரனை (80)

சத்தி கையிற்றாங்குஞ் சண்முகனைப் பாசாங்கு
சத்தியம யத்திசிவ சத்திதரு புத்திரனை

கோகனக னைச்சிரத்திற் குட்டிவிலங் கிட்டவனை
மாகனக வெற்புவில்லி மைந்தனென வந்தவனை

வள்ளிமண வாளனைதெய் வானைமகிழ் நாயகனைப்
புள்ளிமயில் வாகனனைப் பூரணனைப் புங்கவனை

செங்கைவடி வேலவனைச் சேவலனைப் பாவலனைப்
பைங்கடப்பந் தாரணியும் பன்னிருபு யாசலனை

மந்திரசு டாக்கரனை மாலின் மருகோனைக்
கந்தனையு ளத்திற் கருதிப் பதம்பணிந்து

தேனுவுமே கண்டுவக்குந் திவ்யான்ன வர்க்கமுடன்
ஏனல் விருந்தினர்சுற் றத்தா ருடனருந்தி.

சந்தனம்பன் னீர்புனுகு சவ்வாது கஸ்தூரி
கந்தங் கமழக் கனமகிழ்வு டன்பூசி

மோகனப்பட் டாடையின்ன முத்துத் துராயிலங்கப்
பாகைகட்டி வஜ்ரா ப்ரணமெலா மும்புனைந்து

வெற்றித்தார் வேந்தரிசை மிக்கோ ரினமருவு
சுற்றத்தார் பாவாணர் சூழ்ந்து புடையிருப்ப

ஆலநிகர் வேல்விழியா ராடக் கவரியிரு
பாலிரட்டக் கட்டியர்கள் பார்த்திபன்றன் கீர்த்திசொல (90)

மிக்கவரு ளுங்குணமும் மெய்ம்மையுமன் பும்புகழுந்
தக்கவெழி லும்மதியுஞ் சாந்தமுமு னின்றேற்ப

பன்னுவி தானமெனப் பாரிற் சிறந்தோங்கி
மன்னுநவ ரத்னமணி மண்டபத்தின் மீதினிலே

மங்காப் புகழ்படைத்த மன்னன் மகேந்த்ரனெனச்
சிங்கா தனத்தின்மிசை சேர்ந்துகொலு வீற்றிருந்தான்

இத்தகைய தாகவுய ரேந்தலெனுங் கண்ணப்பச்
சித்தசன ராதிபதி சித்தம் மகிழ்போதில்

## தலைவன் வேட்டைக்கெழுதல்

வேயுமகி லுஞ்சாந்தும் வேழத்தின் வெண்மருப்பும்
ஏயும் பொதியமலை யின்சாரலை யடைந்து

வேட்டம் புரியவுள மீதுநினை வாகிமிகு
தாட்டிகஞ்சேர் கட்டியரைத் தன்பால் வரவழைத்து

வீரப்ர தாபமிக மேவியபோர் வீரர்க்குந்
தீரமுறு ராணுவத்துச் சேனு பதிகட்கும்

வேவுகார ருக்கும் மிகுவேட்டைக் காரருக்குஞ்
சேவகருக் குஞ்சென்று சேதி யுரையுமென்றான்

என்றுரைத்துத் தார்வேந்த னேய்ந்த வரண்மனைக்குட்
சென்றுகச்சை பொற்கவசஞ் சீரார் நிஜார்புனைந்து

வல்லயங்கட் டாரி வடிவாள் சமுதாடு
வில்லம்பு சூலம் வெடிகே டயங்கத்தி

துப்பாக்கி பாலா சுரிகை வளைதடிவேல்
அப்பருத் தூணிதோம ரங்குடா ரம்பிண்டி

ஆனபல வாயுத மனேகவித மாயெடுத்துக்
கானமதி லேவசிக்குங் காண்டா மிருகமுதல்

வேங்கைபுலி யாளிமத வேழங் கரடிபன்றி
யோங்குமிரு கேந்த்ரனென வுற்ற விலங்கனைத்தும்

கண்டுவெருண் டோடக் கனவேட்டை யாடுதற்கு
மண்டலத்தோர் மெச்சுமுயர் வாம்பரியின் மீதேறி

ஏடவிழ்தார் தோண்மீ தெழில்விஜய லட்சுமிநின்
றூடல்செய வம்பொன் னணிமுகப்பு வாசல்வந்தான்

காந்தண்மலர் நேருங் கரதலங்கள் சேப்பமலர்
வேய்ந்தகுழன் மின்னார்கள் மென்கவரி காலசைப்ப

தண்டரள வொண்முறுவற் றையனல்லார் கண்களெனும்
வண்டினங்கள் மார்பின் மலர்மாலை மேற்புரள

முத்துக் கவிகைநில முற்று நறுநீழல்செயச்
சித்திரப்பொன் னாலவட்டஞ் சேர்ந்துபந்தி யாகவர

விண்ணூர்ந்த வைந்தருவின் மென்றளிரை யுண்ணவென
அண்ணாந்து நோக்கி யணியொட் டகங்கள்வர

வானாக வாரணத்தை வாவென் றழைப்பதென
வானாகந் தன்புழைக்கை வானா டளாவிவர

வெய்யவன்ற னேழ்பரியும் வெள்க விரைவுகொடு
துய்யமிகு வேகத் துரகதங்கள் முன்செல்ல

தம்பட்டை கொம்புமுர சஞ்சிறுசின் னங்கிடுகு
பம்பை முருடு பதலை யுறுமிசங்கம்

தண்ணுமையெக் காளந் தடாரிவீர சின்னமுடன்
எண்ணில்பல வாத்தியங்க ளெங்கெங்கு மேமுழங்க

கத்திசமு தாடெடுத்து காலாட் படைவீரர்
பத்திபத்தி யாகவிரு பாலுமணி சேர்ந்துவர

வில்வாள்வே லம்பெடுத்து மிக்கமனோ வேகமதாய்
மல்வீரர் கர்த்தரொடு வாள்வீரர் சூழ்ந்துவர

தோமரங்கட் டாரி சுரிகையெறி யீட்டியொடு
தாமதமி லாதுபல தானைகளு முன்னேக

## வேட்டைவீரர் பராக்கிரமழுரைத்தல்

வள்ளநிகர் தாமரையில் வாழ்மா துலவுபுய
வள்ளலெனுங் கண்ணப்ப மன்னன் சமுகமிசை

தந்தி மருப்பொசித்துத் தார்வேந்த னேறிவரத்
தந்தச் சிவிகைக்குத் தாநல்க வேண்டுமென்றே

மாசில்புகழ் மன்னவற்கு வண்கவரி வால்கொணர்ந்து
வீசிவரு சாமரங்கள் வேண்டுவன செய்யவென்றே

மாவீ றிடவதைக்கும் வன்சிங்கத்தைக் கொன்று
மாவீரப் பொற்கடையம் மன்னவன்பால் வாங்கவென்றே ()

தார்வேந்தன் பாலெட் டடிவேங்கை யைக்கொணர்ந்து
பாரில் விருது பரிசுபெற வேண்டுமென்றே

சித்தமதி லொவ்வொன்றைச் சிந்தித்து வேட்கையுடன்
மெத்த விரைந்துபடை வீரர்களு முன்னடக்க

பேணுமுயர் சேனைப் பெருக்கிலெழுஞ் செந்தூளி
சேணுலகை யுற்றுவெய்ய செங்கதிரைப் போய்மறைக்க

மல்லன்மிகு கானகத்தில் வாழுங் கரடிபுலி
வல்லமையை நீக்கி மதமடக்கு நாய்களொடு

கங்குகச்சை சல்லடமுங் காலில் மிதியடியும்
ஓங்குவடி வேலம்பு முற்றகவண் வில்லுடனே

தொங்குமுழத் தாடியொடு தொந்திசரி யச்சரியச்
செங்கண்வன வேடுவர்கள் செம்மலுக்கு முன்செல்ல

புங்கமுறு வெண்களிற்றைப் போய்ப்பாய் வதுபோலச்
சிங்கநெடும் டாலோங்கிச் சேண்டடவி முன்னேக

தாட்டிகஞ்சேர் கண்ணப்பத் தார்வேந்தன் சற்குணவேள்
வேட்டைக் கெழுந்துவரு மேவியநன் மார்க்கமதில்

காடையொடு தூய கருட னிடம்பாயப்
பேடையொடு சேவல்மிகப் பெட்புடனே சேர்தல்கண்டு

வாச நறுங்கமல மாமலரை வென்றமுக
வாசவனுங் கண்ணப்ப மன்னனுளம் பூரித்தான் (130)

மற்செறியுந் திண்டோள் மணிமார்பன் முன்கண்ட
நற்சகுன நன்மை நனியுதவு மென்றுணர்ந்து

காத்தருளு மன்னவன்முன் கைகட்டி யாங்கொருவன்
பார்த்த சகுனப் பயனை யினிதுசொல்வான்

காடை கருடனிடங் கண்டவுயர் காரணத்தால்
நாடும்வன வேட்டை நயமாய்க் கிடைப்பதன்றி

சேவல் பெடையுடனே சேர்ந்து மருவியதாற்
காவலவ! தங்கட்கோர் கன்னிவச மாவளென்றான்

அவ்வுரையா லண்ண லகமகிழ்ந்து சேனையுடன்
செவ்வி யுறும்பொதியச் சீதவரைச் சாரனண்ணி

## வேட்டையாடல்.

காட்டிலெங்கும் வெய்யவலை கட்டியொரு நாற்புறமும்
ஈட்டிசமு தாடடனே யெயினர்களைச் சூழவிட்டு

வாம்பரியின் மீதிருந்து மன்னவர்கோன் கீழிறங்கி
ஆம்பெரிய பேரிகையங் கார்க்குமுகில் போன்முழங்க

ஏந்தியதுப் பாக்கியுட னேவீ ரமைநிறுத்தி
வேந்த னினிதுநிற்க வேடர்வனத் தைக்கலைத்தார்

வெவ்வியசிங் கங்கரடி வேங்கைபுலி யாளிபன்றி
வெவ்வேறு யவ்வவ் விலங்கினங்க டாமோட

வேலாலும் வாளாலும் வில்லாலுங் கல்லாலுங்
கோலாலுங் குண்டாலுங் கோட்டாலுங் கொல்வாரும்

ராமனம்பி னால்வீழ்ந்த ராவணன்போற் பன்மிருகம்
பூமிசைகுப் புற்றுப் பொறிகலங்கி வீழ்ந்ததுவே

கட்டறுத்தார் பாசவினைக் காடொழிந்த தென்னவலைக்
கட்டறுத்துப் பன்மிருகங் காட்டி லொழிந்ததுவே

மைவலைய நேர்விழியார் மால்வலைக்கு ளானார்போற்
கைவலைக்கு ளாகிக் கலங்கியதே பன்மிருகம்

பேய்க்குதவும் லோபர் பெருஞ்செல்வம் போல்வேட்டை
நாய்க்குதவி யாகி நசிந்த சிலமிருகம்

வேரற்று வெற்பனைத்தும் வீழ்ந்ததுபோல் வேழங்கள்
சீரியவெவ் வேல்பாயத் திண்புவியில் வீழ்ந்தனவே

இவ்விதம தாக இயல்வேட்டை யாடவொரு
செவ்வியபொன் மான்வலையிற் சிக்காம லேகுதித்து

பின்றொடர்ந்து வந்தபல பேர்க்கெல்லா மெட்டாமல்
நன்றியறி யார்தமது நட்பதுபோற் போயினதே

போனமான் பின்றொடர்ந்து போர்வேந்தன் கண்ணப்ப
மானபரன் செஞ்சிலையில் வாய்ப்பக் கணைதொடுத்தான்

மானாடி யேகியமான் மாமானை நீத்ததிப்பூ
மானாடியே கியமான் வாழ்மானைச் சேர்த்ததுவே

**தலைவன் சேனையை விட்டுச் சோலையைக்காணல்**

இன்னவித மன்னன் இனிது தனியாக
வன்னமலர்க் காவடைந்து வாவிதனி னீரருந்தி

மன்னன்வரப் பூம்பொரிபோல் மாநிலத்திற் புன்னைமரம்
மன்னு கிளைக்கரத்தால் வன்னமல ருகுக்க

மொய்த்தமலர்க் காவிலுறும் முட்புறப்ப லாக்கனியை
மத்தளம்வா சிப்பதென மந்திகாத் தாலிறுக்க

காற்றடிக்க வல்லி கலப்பதுகைத் தாளமென
ஏற்றுவண்டு தத்தி யிசைபோற் சுதிகூட்ட

தேங்கமழும் பைந்துணரின் தேமாங் குயில்பாடப்
பூங்குழலா ருங்கணிகை போலும் மயிலாட

மாமலர்ப்பூஞ் செந்திருவாழ் மார்பன்கண் ணப்பமுகில்
தேமலர்ப்பூங் காவனத்தின் சிங்காரம் பார்த்துவந்தான்

## பெண்ணினல்லாள் சிறப்பு.

பூவுலகிற் பொற்கொடியார் பொற்பெல்லாஞ் சேர்ந்துதனிப்
பாவையென வந்த பதுமினிப்பெண் காமவல்லி

ஓவியர்க ளாலெழுத வொண்ணாத சித்ரமயில்
ஆவி யனைய வமிர்ததுணை சஞ்சீவி

வாலிபர்க ளாருயிரை வாட்டுமத வேள்பகழி
சீலமிகு மோரிடம்போற் றித்திக்குஞ் செங்கரும்பு

தீட்டு மொழிபழகாச் சித்திரம்போ லின்றியின்பம்
நாட்டு மொழிநவிலு நல்லவொரு ரூபசித்ரம்

விண்ணகத்து மின்னெனவே மின்னி யொளியாமல்
மண்ணகத்து மீதினிலே மன்னியொளிர் கின்றமின்னல் (160)

காயுமத வேள்பகழிக் காற்றெரு ருள்ளத்திற்
றோயுஞ் சுடர்கொளெழிற் றூண்டா மணிவிளக்கு

செஞ்சூட் டனம்போற் றிரிந்தே வருந்தாமற்
பஞ்சூட்டு மெத்தையிலன் பாகவிளை யாடுமன்னம்

வேமருங்கான் மேவாமல் வேட்டிளை ஞோருளத்திற்
காம னடனம்புரியுங் கற்றைக் கலாபமயில்

விஞ்சுமலர்ப் பூங்கொம்பின் மீதிருந்து கூவாமல்
மஞ்சமிசைக் கொஞ்சி மருவுங் குயிற்பேடு

கூட்டு ளடையாக் குழறி மொழிபேசா
நாட்டுமத னூலை நவிலுங் கிளிப்பேடு

யாருக்கு மின்பூட்டு மஞ்சம் புடையமத
ஞருக்கு மின்பூட்டு மஞ்சநடை ரஞ்சிதமின்

வேளா கமத்தை வெறுத்தவரைத் தன்னடிக்கே
ஆளாக மெய்யடிமை யாக்கவந்த தாக்கணங்கு

மாசிலா மாமதியம் வண்டுண்ணு வண்ணமலர்
காசினியிற் காளையர்கள் கண்கவருங் கட்டழகி

செப்புமுயிர்த் தோழியெனுஞ் சீர்மதன வல்லியைப்பார்த்
திப்போ திடத்தோ ளிடக்கண்டு டித்ததென்றாள்

என்ற வுரையோர்ந் தெழில்விழியாய்! இச்குறிகள்
நன்றுனக்குக் காந்தருவ நன்மணங்கை கூட்டுமென்றாள் (170)

பாரத் தனத்தியவள் பன்னுமொழி கேட்டுள்ளம்
பூரித்துப் பூங்காவிற் பூவெடுக்க வேண்டுமென்றாள்

### காமவல்லிக்கு நகைதரித்தல்.

பாங்காக மிக்க பரிமளமெ லாஞ்சேர்த்துப்
பூங்குழலார் பச்சைமஞ்சட் பூசிப் புனலாட்டி

சாந்து புழுகணிந்து சந்த்ரகாந் தச்சரிகைப்
பூந்துகி லுடுத்திப் புனைமே கலைதரித்து

மொய்குழலைச் சீவி முடித்துக் குவிமுலைக்குத்
தொய்யி லெழுதித் துணைவிழிக்கு மைதீட்டி

திங்கணுத லுக்குத் திலகமிட்டுச் சிற்றிடைக்குத்
தங்க வரைஞாண் சதங்கையொட்டி யாணமிட்டு

செவ்விமலர்க் கைகட்குச் செம்பொற் கொலுசிட்டுக்
கைவிரல்கட் கொண்வயிரக் கன்மோ திரங்களிட்டு

முத்தார மிட்டுமணி மோகனப்பொன் மாலையிட்டு
நத்துமூக் குத்தியிட்டு நல்வயிரக் கம்மலிட்டு

காலுக்குத் தண்டையிட்டுக் கால்விரற்கு மெட்டியிட்டு
கோலப் பணிகளெலாங் கொண்டங் கலங்கரித்து

மட்டுப் படாத மதவேழ மத்தகநேர்
கட்டுப் படாத கனதனத்தில் வாரணிந்தார்

பூசல்புரி காமன்றன் பொக்கிஷநேர் மின்னுட்கு
வாசு மலர்மாலை மங்கையர்கள் சூட்டினர்கள் (180)

கோத்தமுத்து மாலையணி கொம்பனையாள் காமவல்லி
பூத்து மணங்கமழும் பூவெடுக்கத் தானடந்தாள்

## காமவல்லி பாங்கியருடன் சென்று மலர்கோய்தல்.

வல்லி யமிர்தகுண வல்லி சகலகலா
வல்லி பத்மவல்லி மதனவல்லி கோலவல்லி

என்னுமுயிர்ப் பாங்கியரு மேந்திழையும் பூங்காவில்
துன்னுமெழில் மானினங்கள் சூழவரும் பிடிபோல்

வந்தணுகிச் செங்கை மலரால் மலர்பறித்தாள்
கொந்தவிழ்பூங் கோதையரங் கோடி மலர்பறித்தார்

## காமவல்லி பாங்கியரை நீங்கி மலர் கோய்தல்.

பொன்னவிர்பூம் போதெடுக்கப் போனமட வார்மறைய
மன்னு மினம்பிரிந்த மான்போல மாதுநல்லாள்

மெல்லியபூந் தாளால் மெதுவாய் நடந்தேகி
அல்லிமுல்லை சம்பங்கி யம்போ ருகமெடுத்து

வம்புசெறி பூங்கா வனமருவு பைந்தருவின்
கொம்புமலர் மீது கொடியிடையு மாலானுள்

கோங்கரும்பு முல்லைமுகை கோகனகஞ் செவ்வல்லி
பாங்குபெறு நீலோற் பலஞ்சண் பகமனைத்தும்

தன்பா லிருக்கமலர்த் தார்குழலி பொன்பொதிவைத்
தின்பா லிரப்பவர்போ லேகி மரங்கடொறும்

மந்தாரை யே!செருந்தி வாதருவே! கார்தருமென்
கொந்தாரைம் பால்முடிக்கக் கோலமலர் தாரீரோ

தாதுளபொற் பூங்கடுக்கைத் தண்டருவே! வண்டடரும்
மாதுளமே! நீருவந்து வண்ணமலர் தாரீரோ

வேங்கையே! கோங்கினமே! விஞ்சுறுமுட் கிஞ்சுகமே!
பூங்கையேற் றேற்குப் புதியமலர் தாரீரோ

புன்னையே! பாதிரியே! போதவிருங் கேதகையே!
என்னையே தும்வருத்தா தின்பமலர் தாரீரோ

கற்பகமே! பூங்கடம்பே! காதலித்தே னுதரித்தே
அற்பகமே வைத்தினிய தாயமலர் தாரீரோ

தண்மகிழம் பூமரமே! தாதகியே! காதல்கொளென்
உண்மகிழ நன்மணம துற்றமலர் தாரீரோ

சண்பகமே! பன்னீரே! தாதவிழு மாதவியே!
நண்பகமே வைத்தினிய நன்மலர்நீர் தாரீரோ

மாங்குயில்காள்! பூங்கிளிகாள்! வாங்குறுதற் பாங்கியர்கள்
நீங்கினின்றார் நீரேனும் நேயமலர் தாரீரோ

என்றுரைத்த மாதி னிசைகேட்டு நாணியுள்ளங்
குன்றி வனக்கிளியுங் கோகிலமும் போயொதுங்க

பூந்தாரு நீழலிலோர் பூங்கொடிபோ னின்றுலவிச்
சாந்தார் தடமுலைமின் றான்றனிய ளாகிநின்றாள்

## தலைவன் சோலையிற் காமவல்லியைக் கண்ணுறல்

(காட்சி)

கூந்தன்மலர் மீது குலவும் வரிவண்டின்
ஏய்ந்த வொலியும் இருகாற் சிலம்பொலியும்

ஆயிழையி னன்மேக லாபரணத் தின்னெளியுந்
தோய்வதனுல் மாதுநிலை தோற்றும் படிகாட்ட

மன்னன் மதிவலவன் மாநிதியன் வாழ்த்துமன்னர்
மன்னன்கண் ணப்ப வரோதயன்ற யாளகுணன்

தன்னெழிலாற் காமன் றனைவென்ற வாள்விஜயன்
மின்னெளிசெய் பொன்னனைய மெல்லியலைத் தான்கண்டான்

ஐயம்

பாரகமோ விண்ணே பனிவரையோ பாற்கடலோ
நீரகமோ விங்குதனி நின்றவெழி னேரிழையே

துணிவு

வார்குழலில் வேய்ந்தமலர் வாடியதா லொண்முகத்து
வேர்வை யரும்புதலால் மெல்லடிபார் மேவுதலால்

கையா லழைப்பனபோற் கண்களிமை யொன்றுவதாற்
செய்யா ளனைத்திகழுந் தெய்வமல்ல ளிம்மாதே.

இவ்வுலக மின்னே யெனமதித்துத் தார்வேந்தன்
செவ்வியவம் மாதின் செவிக்கினிதா கப்பகர்வான்

தலைவன் காமவல்லியை வியத்தல்

கொண்டலைநுங் கூந்தற்குக் கூறிலதொவ் வாவரவங்
கொண்டலையி லோடியுயர் குன்றேறி யொன்றியதால்

அம்பிறையென் றுலதற்கோ ரானசுட்டி யில்லைமலர்
அம்பிறையின் றனையென வார்ந்தவுங்கள் வாணுதலை

ஆய கரும்புருவ மவ்வனங்கள் வில்லென்னுந்
தூய கரும்புருவந் தோற்கத் துலங்கியதே (210)

அம்படைத்த வாளியங்கி யம்படைக்கி யானெதுங்கேன்
அம்படைத்த வுங்கள்விழி யம்படக்க வச்சமுற்றேன்

கள்ளையுமிழ் பூங்குவளைக் கண்மடவீர்! உங்காது
வள்ளையென்று சொல்லினது வஜ்ரநகை பூணுதே

பூங்குமிழின் பூவதனைப் போன்றமூக் கென்னிலிது
தாங்குமிளிர் முத்தமது தாங்குவது காண்கிலமே

சேய்க்குமுத மாமலரைத் தேமொழியீர்! உங்களது
வாய்க்குவமை யென்றாலிவ் வண்ணமம லர்க்குண்டோ

தோற்ற வரிதாய்த் துவள்கின்ற சிற்றிடைக்குத்
தோற்றகொடி முல்லைமுகை தூமூரற் கொப்பாமோ

வெண்ணிலா வென்றுமது மென்முகத்தைச் சொன்னாலஃ
தெண்ணிலாக் குற்றங்க ளெய்தியதா லொவ்வாதே

வாங்குவளைச் செங்கை மடநடையீர்! உங்கழுத்திற்
காங்குவளை யுங்கமுகு மஞ்சிவனத் துற்றதுவே

தோளெழிற்கு மூங்கிலிணை சொன்னாற் றலைமகட்குத்
தாளடிமை வேலைசெயுந் தாதிதனைச் சொல்லாரே

வாய்மொழிக்குத் தோற்று வளைவுற்ற யாழதனைத்
தூய்மைமிகு முன்கைக்குச் சொல்லினது நேராமோ

ஆர்வமொடு தாமரைநும் அங்கைநிக ராவதற்கோ
நீர்நிலையி லோர்தாளில் நின்றுதவம் பண்ணுவது

சாற்றரிய தம்புருவிற் சாருமுங்கள் கைவிரற்குச்
சேற்றிற் றவழ்களிற்றைச் செப்பினா லொப்பாமோ

செங்கரத்திற் பைங்கிளிகள் சேர்தலதன் மூக்கைநிகர்
உங்கள் விரற்பவளத் துற்றவுகிர்க் கிச்சைகொண்டோ

வேந்தர் மணிமுடியோ மேருமலை யோசெண்டோ
பூந்தா மரைமுகையோ பொற்கிண்ண மோசிமிழோ

பம்பரமோ புற்புதமோ பச்சிளநீ ரோபந்தோ
கும்பமோ வல்லோச கோரமோ பொற்குடமோ

கைத்தாள மோகோங் கரும்போ மதயானை
மத்தகமோ வஃதின் மருப்போ மலர்க்கொத்தோ

ஓதுமுங்கள் கொங்கைக் குபமானஞ் சொல்லுதற்கு
யாதொன்றுந் தோன்றா ததிசயித்து நின்றேனே

செந்தா மரைமுகையிற் சேர்ந்தவண்டை நேர்ந்திருக்கும்
பந்தார் பணைமுலைக்கட் பாங்கதனை யென்னசொல்வேன்

ஆலிலையு மாங்கதி லனந்தல்செய்யு மாலுமெனச்
சாலவெழி லார்ந்ததுங்கள் தண்வயிறும் ரோமமுமே

மன்னுமுங்கள் சிற்றிடை வரைக்குவமை வார்கடலிற்
றுன்னுதிரை யென்னிலது தோன்றுநிலை கொள்ளாதே

அந்தரமென் றும்மிடையை யான்புகல்வ னேலதிலே
மந்தரமும் பொற்றேரும் மன்னுமோ வென்பாரே (230)

நிந்தித் தருவருக்கும் நிஷ்காம ருள்ளமதை
உந்திச் சுழித்திழுக்கும் உந்திச் சுழியழகே

நல்ல கடிதடமோ நாடு மரசிலையோ
அல்ல கடிதடநின் றுடுமர வின்படமே

பம்புமலர்ச் சோலைப் பணிக்கதலி யோயானைத்
தும்பிக்கை யோமணிப்பொற் றூணோ தொடையிரண்டும்

ஞெண்டைச் சுமந்துநின்ற நீதவரா லோகணைக்கால்
அண்டவிரண் டைச்சுமந்த வாண்மையோ வுங்களடி

கந்துகம் மோகுதிகால் கைத்தரா சோபரடிங்
கெந்தவித மாக விணைசொல்லக் கூடியதே

ஐவிரலு நற்படமோ வம்முத்த மோகாலிற்
செவ்விதென வுற்றவிரற் சேர்ந்த சிறுநகங்கள்

அங்கை யிணைக்குவமை யாகத் தவம்புரிந்த
பங்கயமலீ தெய்தரிதும் பாதமதிற் சார்ந்ததுவே.

இன்னவித மாக வெழிலமைந்த மாதரசி
தன்னைநும்மை யன்றித் தரணிதனிற் காண்கிலனே

## தலைவன் காமவல்லியை வேண்டல்

வென்றிவடி வேல்விழியை விட்டென்றன் மார்புருவ
நின்றீர் முடிசாய்த்திந் நீதியுமக் கானதன்றே

சேயிழையார் யாருமின்றிச் சித்திரம்போ னின்றவரே!
வாய்திறந்தோர் வார்த்தைசொன்னால் வண்ணமுத்து திர்ந்திடுமோ

பொங்கு மதுவரும்பாப் போதுமுள வோவுலகில்
இங்குமது வாய்க்குமுதத் தென்னை நறவிலதே

வேளா சமத்திற்கு வித்தாகச் சித்தமதில்
நாளா நினைத்தும்மை நாண்மலரோன் செய்தானோ

மைதேர்ந்த கண்ணார் வடிவனைத்துஞ் செய்தவயன்
கைதேர்ந்த பின்னும்மைக் கற்பித்து விட்டானோ

பாதபக் கிளையினடுப் பாலெழுத் தகற்றியயன்
ஓதவ் விரண்டெழுத்தை யுங்கள்விழி யாக்கினனோ

வில்லார் நுதலீர்! விழிகளென நும்முகத்திற்
கொல்லாமற் கொல்லுகின்ற கூற்றுவனைக் கொண்டுநின்றீர்

அச்சுறுத்து மென்றே யரைக்குளர வைமறைத்தீர்
நச்சதனைப் பார்வைதனில் நாட்டிநிற்றல் நன்றாமோ

பொங்குபல தீர்த்தமெலாம் போய்மூழ்கி வந்தாலும்
உங்கள் மயற்கடலி னுட்டோய்தற் கொப்பாமோ

கற்பகப்பூங் கொம்பனையீர்! காமச் சுரந்தீர
நற்ப வளமருந்து நல்கி யருளீரோ

தங்கமக மேருவெனத் தாமிருத னம்படைத்தீர்
உங்களிட மேற்பேற் குதவா விடிலறமோ

ஊருட்பண முள்ளவரென் றும்பா னயந்தேற்கு
நீரரைப்ப ணம்முதவ நேரீரே னீதியன்றே

ஆனைகட்டி வாழ்நும் அரசியலைப் பார்க்கவந்தால்
மானமட்டுங் காட்டி மதகரிம றைப்பதென்னே

வட்டியைநின் மாதனங்கை வந்துறச்செய் வீரேனுன்
இட்டமுடன் கூடுதல்செய் தேற்ற பொருணல்கேனே

தாமக் குழலீர்! தனக்குடமென் கைதந்தாற்
காமக் கடலைக் கடந்துகரை யேறேனே

அங்காருந் தானைபுர மாக்கினிரு கோக்களிறு
சிங்கா தனத்திருக்குஞ் சீரதனைப் பாரேனே

தந்திதனை நண்ணியநுந் தந்தி விணைத்தவயன்
விந்தைதனை நோக்கின் மிகவியக்கத் தக்கதுவே

தங்கு கிரிவலம்வந் தாங்குதெரி சித்தாலுஞ்
செங்களபக் கொங்கைத் தெரிசனத்துக் கொப்பாமோ

இந்துநுத லீர்!உம் இணைமுலைக்கு நாணியன்றோ
விந்த மடங்கியதிம் மேதினியின் மீதினிலே

காளூட்டு மோாவடத்திற் காணவிரு யானைகட்டித்
தேரோட்டும் விந்தைகண்டு சிந்தைமகிழ் வெய்தேனே

தேருக்கு வாழைகட்டிச் செய்யும் விழாவையுங்கள்
ஊருக்குட் பார்க்கவந்தா லூடுதிரை போடனன்றோ

சீரங்கக் கோபுரந் தெரிசிக்கச் செய்ததுபோற்
சாரங்க பாணி சயனமதைக் காட்டீரோ (260)

தேம்பா கனமொழியீர்! சேதுலிங்க சேவைசெயப்
பாம்பா றிடைமறிக்கப் பண்ணுவித்தீர் நன்றாமோ

யானையொடு பொற்றே ரளித்தா லவைகொண்டு
வேனி லனங்கனைநான் வெல்லுவதை நீர்பாரும்

சித்தசனுங் கள்வனிடர் தீருவா னீரென்றன்
அத்தமதை நுஞ்செப்பி லாரவருள் செய்வீரே

பண்களிக்குமென்மொழிப்பொற்பாவையன்னீர்! ஐம்பொறியுள்
கண்களிக்கச் செய்து கரத்தனன்றோ மற்றவைக்கே

சேலமதைக் கண்டதுபோற் சேயிழையீர்! என்னிருகண்
ணுமது வல்லத்தை நான்பார்க்கச் செய்வீரே

வாஞ்சை யெனும்பெரிய வாரிதியி லாழ்வேற்குக்
காஞ்சித்னைக் காட்டுவித்தாற் கண்டுகரை யேறேனோ

குற்றாலத் தோடு குடந்தையையு நான்காணப்
பெற்றாற் றரிசித்துப் பேரின்ப மெய்தேனோ

ஆடகப்பூம் பாவையன்னீர்! அன்பாக நீரென்னைக்
கூடலுக்கு வாவென்றாற் கூடவர மாட்டேனோ

சற்றன்பு வைத்திடையிற் றானேமறிக் காதுசெய்தால்
உற்றதிரு வே!கம்ப வூரதனைச் சாரேனோ

ஓதுபு னல்வாயி லுற்றநறுந் தீர்த்தமதிப்
போதுவந் தளிக்கினிது போலுமுண்டோ புண்ணியமே (270)

வல்லவரே! நீவிர்மெய் மார்க்கமறி விப்பீரேல்
நல்ல வலஞ்சுழியை நான்கண்டு கொள்ளேனோ

திக்கயமு மிந்திரனூர் திண்களிறு மெண்டிசைவிண்
புக்கியது மங்குசத்துன் புக்குமிக வச்சமுற்றோ

அங்கா ரிகையீர்! அத்தி யாலரசைக் காட்டுவித்தால்!
வெங்காமக் கோடை வெயிற்கொதுங்கி யாறேனோ

வாளனைய கண்மடவீர்! மன்னுமுங்க ளூரரசை
ஆளுதற்கு வந்த வரசென் றறியீரோ

கோட்டைவென்ற கும்பமுலைக் கோகிலமே! நாட்டரசன்
கோட்டைநகர் வேந்தனெனக் கூறுவது தேறீரோ

நானுந் திருப்பனசை நற்பதியான் மாதருணீ
தானு மரசியெனிற் றக்கதலாற் றாழ்வாமோ

கண்டவர்தங் கண்கவருங் கற்றைக் கதிர்மணிமா
மண்டபத்தி னூடுசெப்ர மஞ்சமிசை வீற்றிருக்க

அம்புவிழி யார்ருடன மாடக் கடல்புடைசூழ்
அம்புவியோ ரெல்லா மதிசயித்துக் கொண்டாட

தக்கவென்றன் செல்வந் தனைநீ ரடைவீரேல்
இக்குவல யத்தி வியற்றுந் தவமலவோ

காந்தருவ மாதர் கருதுமெழிற் காரிகையீர்!
காந்தருவ மாகக் கலந்திடுத லான்முறையே

என்றுசொன்ன வார்த்தை யியல்பையெல் லாமுணர்ந்து
துன்றுமெழிற் கால்விரலாற் றேகைநிலங் கிறிநிற்க

கண்டுணர்ந்து வேளனைய கண்ணப்பக் காவலவன்
கண்டுமொழி யின்செங் கரம்பிடிக்க நாணிநின்றாள்

மன்னவனும் மின்னரசும் மாலுமலர் மாதுமெனத்
துன்னுமலர்ப் பூங்காவின் றூயமணி மண்டபத்தில்

மிக்க தருக்களெலாம் மென்கவரி போலசைந்து
தக்க கிளைக்கரத்தாற் றண்ணமலர் மாரிபெய்ய

வண்டு சுதிநீட மாங்குயில்கள் பண்பாடக்
கண்டு மயில்கள் கலாபம் விரித்தாட

மானார் விழிவள்ளி மங்கையுடன் கந்தனுஞ்செந்
தேனார் மொழியிரதி தேவியுடன் மாரனும்போல்

மின்போன்ற சிற்றிடையும் வேந்தனுமங் கேயமைத்த
மென்பூ வமளிமிசை மேவி மகிழ்வாக

அன்புமீ தூர வளவிற் பெருங்காம
இன்பந் தனிலாழ்ந் தினிதாய்ச் சுகித்திருப்ப

## தலைவனைத்தேடித் தளங்கள் வருதல்.

அம்மானை யாடுசெங்கை யம்மானை நாடிவந்த
அம்மானை வென்றவர்நே ரம்மானை யேதேடி

தானைவரு கின்றவொலி தானுணர்ந்து தார்வேந்தன்
மானைவென்ற கண்ணாளை மாதரசே நில்லென்று (290)

சொல்லியுயர் வாள்விஜயன் றேகையையங் கேநிறுத்தி
வெல்லரிய சேனைதனில் வேல்வேந்தன் வந்துநின்றான்

### தலைவன் தளங்களைக்கண்டு நகர் நோக்கி விஜயமாதல்

தங்கச் சிவிகையின்மேற் றார்வேந்தன் றானேறி
எங்குமுகி லென்ன வெழில்வாத் தியமுழங்க

பூங்குயிலுங் கிள்ளைகளும் பூவைகளு மன்னவன்றன்
ஓங்குமிகு சீர்த்திதனை யோதுவது போலொலிப்ப

தங்கும் பொறிச்சுரும்பர் சார்ந்தினிய பண்மிழற்றும்
பொங்கும் புதுமதுவார் பூஞ்சோலை தான்கடந்து

பாட்டரசன் வைகும் பனசைப் பதியென்னும்
நாட்டரசன் கோட்டை நகரந் தனையடைந்து

காசினியோர் கொண்டாடுங் கண்ணப்ப வள்ளலுயர்
தேசிவி நாயகன்றன் செம்பொற் பதந்துதித்து

விண்ணுடைய வார்முரசம் மிக்கவதிர் தென்பனசைக்
கண்ணுடைய நாயகியின் கஞ்சமலர்த் தாள்வணங்கி

கங்கையிளந் திங்கள் கடுக்கையணி செஞ்சடிலத்
துங்கவரை மங்கைபங்கர் சோழீசர் தாள்பணிந்து

பூங்கடலிற் கண்வளரும் பூந்துளவத் தாமமணி
வேங்கடமால் செய்யவர விந்தமலர்த் தாள்பரவி

### தலைவன் பவனிவருதல்.

மிக்கோர் புகழ்வளங்கள் மேவுந் திருநகரில்
தக்கோன் பவனிவரத் தன்னுளத்தி லேகருதி (300)

நால்வாயு மும்மதமும் கண்ணுமிரு கோட்டுமுள
மால்யானை யின்மீது மன்னன் மகிழ்ந்தேறி

மூக்கா லமுமுணரு மூதறிவி னாலுயர்ந்த
தக்கமதி மந்திரிமார் தானைதள கர்த்தரெலாம்

முன்னர்வரத் தண்ணொளிசெய் முத்துக் குடைநிழற்ற
மன்ன னருகினின்று வண்கவரி காலசைப்ப

முத்து வடஞ்சரிய முன்வருவர் மாதர்சில
குத்துமுலைக் கோடசையக் கோதைசில பேர்வருவர்

ஓடியமா னுக்குவிரைந் தோடியமான் றன்னெதிரே
நாடிவரு மானையெலா நாட்டமுற நோக்காமல்

கோலத் திலகநுதற் கொம்பனையார் செங்கையில்
ஆலத்தி கொண்டுவந்தங் கண்ணற் கினிதெடுப்ப

மன்னுமிரு வெண்கோட்டு மால்யானை விட்டிறங்கிப்
பன்னு நலந்தருமுப் பத்திரண்டு தானமெலாம்

செய்துபல வேழைகட்குஞ் செந்தமிழ்ப்பா வாணர்கட்குந்
தெய்வநறுந் தாருவெனச் செம்பொன் மிகவழங்கி

கட்புலனுக் கெட்டாக் கருதுமுயர் மாளிகையின்
உட்புகுந்து தானெவ் வுலகத்தோ ரும்புகழ

தேவேந் திரனென்னச் சிம்மா தனத்தின்மிசை
மேவுபுகழ்க் கண்ணப்ப வேல்வேந்தன் வீற்றிருந்தான் (310)

### தலைவி தலைவனைக்காணா தயர்தல்.

இன்ன விதமாக வேந்தனெனுங் கண்ணப்ப
மன்ன னினிதிருக்க மாதரசி பூங்காவில்

வேந்தன்வ ராதுகண்டு வேலைவென்ற கண்ணாள்மெய்
சோர்ந்துமதன் வாளியினாற் றொய்யின் முலைபசந்து

நாடியபூ மண்டபமும் நண்ணியநன் னீர்ச்சுனையுந்
தேடித் திரிந்தெத் திசைதனிலுங் காணாமல்

வேய்ந்த மலர்க்குழலி மேவு முருவெளியை
ஏந்தலிதோ நின்றானென் றின்பமுடன் றெண்டனிட்டு

கோவே!யென் மீதேதுங் கோபமோ வென்றுரைத்து
மேவவே தானெழுந்தாள் வேனின் மயற்பித்தால்

வார்புருவ மாது மதன்கையம்பு மாமுலையின்
மார்புருவ வாடி மயங்கினாள் மான்போல

மாலாகி வேளாகி வாசவனுந் தானாகி
மாலாகிச் சேர்ந்தோன் மனத்துள் மறந்தானே

கண்ணனென்ப தற்கேற்பக் கண்ணன்செய் லீலையெலாங்
கண்ணன் மலர்க்காவிற் காட்டி யகன்றனனே

பாரி யெனக்கொடுத்தொப் பாரின்றிக் கீர்த்தியுற்றோன்
பாரியெனக் கைப்பிடித்திப் பாரினிற்கை விட்டானே

கந்தரத்தை தந்தமைந்தன் காமுறத்த குந்தமிகு
சுந்தரத்தை யென்றன துளத்தெழுத வந்தானோ

என்கண்ணன் மாலாகி யின்பமொடு சேர்ந்தகன்ற
வன்கண்ணன் றானல் வணிககண்ண னென்றானே

யாதுவிஷ யத்துமென்றன் யாதுசெலா மாலைவரை
யாதுநல்கி யீதைபறி யாதுதனி கண்டானே

ஓராழித் தேரைமறைத் தோங்காழிப் பள்ளிகொண்டோன்
போராழி யின்வழியே பூந்திவலை முத்துகுத்தாள்

விண்பகமே லோங்கி விரிந்தடரும் பூங்கமுகே!
சண்பகமே! நீரெனது தார்வேந்தைக் காணீரோ

வந்தாரை யேகா வணமகிழ்செய் மாமகிழே!
மந்தாரை யே!யென்மகிழ் நன்வரக் காணீரோ

தாதகியே! போதவிருந் தாதனையு மாதளையே!
பாதகியே னைப்பிரிந்த பார்த்திபனைக் காணீரோ

கிஞ்சுகமே! விஞ்சுமணக் கேதகையே! காதன்மிகுந்
தஞ்சுகமே தந்தகன்ற வார்வலனைக் காணீரோ

என்னாக மென்னமல ரேய்ந்தநறும் பூந்துணர்கொள்
புன்னாக மென்மரங்காள்! பூபதியைக் காணீரோ

வண்டினஞ்சேர் செங்கைமட வார்விழியை நேர்கொளெழில்
வண்டினங்காள்! நீரென் மகிபன்வரக் காணீரோ

கள்ளையுமிழ் மெல்லிதழ்ப்பூங் காவதனில் மேவுபசுங்
கிள்ளைகாள்! நீரெனது கேள்வன்வரக் காணீரோ

மேவுங் குளிர்காவில் வேளை யழைப்பதுபோற்
கூவுங் குயில்காள்!என் கொற்றவனைக் காணீரோ

பூவையம்பு போன்மெனவே பொங்குநிறந் தங்குமெழிற்
பூவையம்புட் காள்!எனது பூமானைக் காணீரோ

நாகமதைக் கண்டு நடனமிடு கின்றபசுந்
தோகைமயில் காள்!என் றுணைவன்வரக் காணீரோ

வன்னக் குழலியர்க்கு வாய்ந்த நடைபயிற்றும்
அன்னக்கு ழாங்காள்!என் அன்பன்வரக் காணீரோ

கானினங்கார் பல்விலங்குள் கண்ணோக்கி னிற்சிறந்த
மானினங்காள்! நீரெனது மன்னவனைக் காணீரோ

பொருப்பனசை யோகமுறு பூண்முலையாய்! யானோ
திருப்பனசை யென்றானஃ தின்பொருளை யோர்ந்திலனே

இந்தவித மிங்கெனைவிட் டேகுவா னென்றறிந்தால்
முந்த வழிமறித்து முன்றானை கொள்ளேனோ

என்றுகலை சோர விருகை வளைநெகிழ
மன்றலவிழ் செந்தே மலர்ப்பூங் குழல்சரிய

நேரிழைத னக்கிவித நேர்ந்ததனை யோர்ந்துமிகச்
சோர்வடைந் துயிர்த்துபசுந் தோகைமயில் போற்கிடந்தாள்

### பாங்கியர் தலைவியைக் காணல்.

பண்ணாரு மஞ்சொன்மொழிப் பாங்கியர்கள் பூங்குவளைக்
கண்ணாளைத் தம்மினத்திற் காணா துடனடுங்கி

அன்னக் குழாம்போ லனைவோருந் தாங்கூடி
வன்னமலர்ப் பூங்கா வனமுழுவ துந்தேடி

காரஞ்சு மென்மலர்ப்பூங் கார்குழலி வார்கொண்முலைப்
பாரஞ் சுமந்தழுந்தும் பாதச் சுவடறிந்து

பாவை யடிக்குறியைப் பற்றிநடந் தாரங்கு
பூவைகளுங் கிள்ளைகளும் பூங்குரல்வி டாதடங்க

மன்னுமரன் சென்னி மணிமகுடத் துற்றபிறை
என்னவொளிர் மென்முலையி விட்ட நகக்குறியும்

கொவ்வை நறுங்கனியிற் கோதில்கிளி கோதினபோற்
செவ்வியவாய் தன்னில்வடுச் செய்ததந் தக்குறியும்

வெண்ணித் திலமெனவே வேர்வரும்பி வின்னுதலில்
நண்ணித் திலக நனைதரவே சிந்தியதும்

கூந்தன் முடிப்பவிழக் கோடல்வளை கைநெகிழப்
பூந்துகிலி டைநழுவப் பொன்மேனி மாசடைய

தாரணிந்த மேனி தளர்வுற் றிடநோக்கி
வாரணிந்த கொங்கை மடவா ருளமுருகி

தெய்வக் குறையோ திருஷ்டிபட்ட தோவன்றி
மைவிழியாய்! நித்திரையோ மாமயலோ யாமறியோம்

வன்னமலர் வாய்திறந்தோர் வார்த்தைசொல்ல லாகாதா
அன்னையறி வாளாயி னாவியைவி டுப்பளென்றே

ஆவலுடன் மார்போ டணைத்துமடி மீதிருத்திப்
பாவை முகத்தைப் பனிநீரி னாற்றுடைத்து

மாமுலைமென் செவ்வாய் வடுவெய்த தென்னவென
ஊமரைப்போல் மாதரசி யொன்றுமுரை யாதிருப்ப

வானவனோ மாதை மருவிச் சுகித்தகன்று
போனவன்யா ரோவெனவே புந்திதனி லேநினைந்து

கண்ணுற்ருர் பங்கிலொரு காளை யடிச்சுவட்டை
எண்ணுற்ரு ரன்னதனு லேய்ந்தபித் தெனத்தேறி

மான்வேட்டை யாடுதற்கு மன்னன்கண் ணப்பவள்ளல்
தான்வரக்கண் டோமவனே தார்குழலைச் சேர்ந்திருப்பான்

அன்னதனு னந்தமக்கோ ரையமு மவச்சொல்லும்
பின்னை யொருபயமும் பேச்சும் பழியுமில்லை

தூயபுகழ்க் கண்ணப்பத் தோன்றலைய ணைந்ததிவள்
வாய்மையெனில் மாதர்களுள் வாய்க்குமிகு பாக்கியத்தாள்

## பாங்கியர் தலைவியை மாளிகைக் கழைத்து வரல்.

என்றுதம துள்ளத்தி லெண்ணிக்கை லாகுதந்து
துன்றுமணி மாளிகைக்குத் தோகைதனைக் கொண்டுசென்று

பூதரநேர் மாதனத்தார் போதுநிகர் தாள்வருடி
மாதரசி தன்னை மலரமளி மீதில்விட்டார்

மையலெனும் வெய்யபிணி வாட்டத் திருவனைய
தையனல்லாள் மேனி தளர்ந்து புலம்பலுற்ருள் (360)

## தலைவி விரகத்தால் புலம்பல்

ஆரழலை வீசுகின்ற அம்புலியே! சற்றுநெஞ்சில்
ஈரமதி லாநின்னை யீரமதி யென்பதென்னே

நச்சுப்பற் பாம்பதனை நல்லபாம் பென்பவர்கள்
அச்சமுறக் காயுமுனை யந்தண்மதி யென்னுரோ

அம்புலிபோ லேதணந்தார்க் காகின்ற தாலோவுனை
அம்புலியென் றிவ்வுலக மைப்பதுக லாமதியே!

சந்திரனே! நீயுலகிற் றண்மதிப்பேர் பெற்றுமென்ன
செந்தணன்மு கத்துதித்த தீயகுண நீங்கிலையே

வெற்றிமத வேளே!நீ வீரனுக்கு வீரன்றிக்
கற்றைக்குழன் மீது கணைதொடுத்தல் மேன்பாடோ

காமா!வுன் வீரமெலாங் காண்பேன்கா விற்கலந்த
பூமான்வந் துற்றவுடன் போர்த்திறத்தைக் காட்டுவையேல்

சோடு தனைப்பிரியின் றுன்பமுறு மன்றிலே!நான்
ஆடவரை நீத்த லறிந்து மாற்றுதியே

காவிற் கலந்தவென்றன் காதலற்பெ றுந்துணையும்
மாவிற் குயிலே! மனம்பொறுத்தி கூவாமல்

தென்றலே! நீவந்தாற் றேசத்தோர் நன்றென்பார்
உன்றனது தீச்செயலை யோர்ந்தோ ரதுவுரையார்

கொண்டல்காள்! கூந்தலைநேர் கொண்டவொரு கொள்கையினால்
விண்டுரைத்தேன் காதலெலாம் வேந்தனிடம் போந்துரைமின்

மாலைகொண்ட வண்டினங்காள்! மாலைவரு முன்போயென்
மாலையெலாஞ் சொல்லிமன்னன் மாலைகொடு நீர்வருவீர்

ஓதிமங்காள்! ஏதமற வோதரிய காதலெலாம்
நீதிமங்கா வென்றனது நேயனிடம் போயுரைமின்

அஞ்சுகங்கு லொன்றெனக்கோ ரஞ்சுகங்க ளாவதனை
அஞ்சுகங்கொ டுத்தவன்பா லஞ்சுகங்காள்! சென்றுரைமின்

நெஞ்சமதைத் தூதுவிட்ட நீதமதை யாதுரைப்பேன்
வஞ்சமெற்குச் செய்துவிட்டு மன்னனிடந் தங்கியதே

என்றுபல வாறுக வேந்திழையா டான்புலம்பித்
துன்று துயர்க்கடலிற் றேய்துறைகா ணுதிருப்ப

பாலனம்பண் மின்னான் பாலனவள் பாலுற்றைம்
பாலனமே! யுண்ணென்க பாலனந் தனைவெறுத்தாள்

பாயசத்தைக் கொன்றும்விதப் பாயசத்தைத் தீர்க்குமினிப்
பாயசத்தைக் கொண்டநறும் பாயசத்ததைத் தான்கசந்தாள்

பாக வழுதிரசம் பாகவருந் தீங்கனியின்
பாகவளித் தாலிவைவேம் பாகவனித் தோதுமென்பாள்

ஓதுமத னப்பின் உபத்திரவந் தாளாமல்
மாதுநல்லா ளிங்கு வருந்துந் தருணமதில்

## அன்னே பாங்கியரை வினவல்

மொய்த்தவத்தார் வேய்குழலம் மோகனமின் னேயெனலா
மெய்த்தவத்தால் வந்துதித்த மெல்லியல்பாற் ருயடைந்து ()

செண்டுமுலே மாதரசி தேகமெலி வுற்றிருக்கக்
கண்டு மனந்துடித்துக் காரிகைய ரைச்சினந்து

கற்றைக் கருங்குழல்கொள் காரிகைக்குக் கானகத்தில்
உற்றதுணரே னெளியா துரையு மென்ருள்

அம்மொழியை யாங்குணர்ந்த வாயிழையபா ரச்சமுற்றுச்
செம்மைமொழி யாலனேக்குச் செய்திதனேச் செப்பலுற்ருர்

செய்வினேயு மல்லமற்ற தெய்வக் குறையுமல்ல
மையணிந்த கண்ணுட்கு மற்ரேூர் குறையுமல்ல

மன்றல்செறி காவின் மலரெடுக்கும் போதிலெமை
என்றுமக லாடனியே யேகி மலரெடுத்தாள்

தோகைதனேக் காணுது சோலேயெங்குந் தேடிவரச்
சோகமுடன் மாதோர சோக்மரத் தின்பாங்கர்

மன்னியநும் மாதின் வனமுலேயின் மேற்குறிகள்
துன்னவே கண்டு துடித்துமனச் சோர்வுற்ரேூம்

சோர்ந்திருக்க மாதின் சுவட்டினெடு வேறுசுவ
டார்ந்திருக்க மன்ன னடிச்சுவடென் ருங்குணர்ந்தோம்

சுந்தாஞ்சேர் கண்ணப்பத் தோன்றல்வன வேட்டைக்கு
வந்தவித மன்றி வகைவே றறியமென

சேயிழையா ரிவ்வாறு செப்பச் சுமந்தீன்ற
தாய தனேக்கேட்டுத் தாதியரைத் தான்வெகுண்டு (390

சோலைதனிற் பூவெடுக்கத் தோழியர்காள்! சென்றுமணை
மாலையுட னென்மகளை மாளிகைக்குக் கொண்டுவந்தீர்

மங்கைநல்லா டன்கருத்தை வாள்விழியீர்! யானுணர்ந்தாற்
பொங்கர்தனிற் பூவெடுக்கப் போக விடுவேனோ

## அன்னை மகளை வினவி அகமகிழல்

மானே! மரகதமே! மாங்குயிலே! மாமயிலே!
தேனே! தெவிட்டாத தெள்ளமுதே! தீங்கனியே!

கன்னற் கனிரசமே! கற்கண்டே! சர்க்கரையே!
வன்னமலர்ப் பூங்கொம்பே! மாசிலா மாமணியே!

வாளும்விட முங்கணையும் வண்டுநிகர் கொண்டகண்ணி!
நாளு முனக்கு நவின்றே னுணர்ந்திலையே

நேயமுடன் பூவெடுக்க நித்தியமும் போனாலும்
ஆயிழையாய்! ஆங்குதனி யாயிருக்க வுற்றதென்ன

வாய்ந்ததன வல்லிவில்லி வானுதன்மின் வார்செவிக்குச்
சாய்ந்ததனத் தாய்வார்த்தை சற்றேனுந் தான்புகுமோ

தாகவிடாய் தீரத் தயங்குமொரு வர்க்கினிய
தாகவிள நீரிரண்டு தந்தால் விடுவாரோ

நீள்புவியை யாளுமனு நீதியரன் கண்ணப்ப
வாள்விஜயன் காணிலென்றன் மாதைவிட்டுப் போவானோ

மான்விழியார் மையல்கொளும் மன்னன் வடிவதனைத்
தேன்மொழியாள் காணிலங்கு சேராமல் மீள்வாளோ (400)

தந்தைதாய் சுற்றத்தார் சம்மதத்தைத் தாமுணரா
தெந்தவித மாகவெம தேந்திழையைச் சேர்ந்தணைந்தார்

தீங்கொருவர் செய்வாரேல் சென்றுமன்ன வற்குரைப்போம்
ஆங்கவனே யஃதுசெய்தால் யாரிடத்தில் யாமுரைப்போம்

ஆதவன்போய் மூழ்கியெழு மாழிபுடை சூழுலகிற்
பேதையெனுஞ் சொற்கேற்பப் பெண்ணரசி செய்துவந்தாள்

வேதன் விதித்த விதிப்படியா மென்பதல்லால்
மாதுதனை நோவதிலும் வைவதிலு மென்னபயன்

தாரணியி லாண்பெண் டமக்குரிய நன்மணமே
தாரணிந்த மொய்குழலா டானினிது செய்துவந்தாள்

தார்வேந்தற் கென்மகளே தக்க மனையாளாம்
பார்புகழுங் காரிகைக்கப் பார்த்திபனே காதலனும்

மேதினியில் மாதரசி மெய்த்தவமென் செய்தாளோ
போதெடுக்கப் போய்நல்ல பொன்முடிப்புக் கொண்டுவந்தாள்

பங்கமில்வெண் பாலிற் பழநழுவி வீழ்ந்ததுபோன்
நங்கைசெய்பூ ஜாபலமோ நான்செய்த மாதவமோ

என்றுரைத்துத் தன்மகளை யின்பமுறத் தான்றழுவி
மின்றிகழு மேருநிகர் மென்மைமுலை மெல்லிபலே

காவலனுங் கண்ணப்பக் காதலனைச் சேர்ந்தென்றும்
பூவுமண மும்போற் பொருந்திமிக வாழ்ந்திரென்றாள் (410)

எத்திசையும் போற்றுமுய ரேந்தலொடு கூடிநல்ல
புத்திரரைப் பெற்றுப் புகழுடனே வாழ்ந்திரென்றாள்

வாசமலர் மங்கையர்கள் வண்ணச் சிவிகையுடன்
வாசலில்முன் வந்துநிற்க மாதாவுங் கண்டாளே

கண்டு மனங்களித்துக் காணுறுபொற் பல்லக்கிற்
கொண்டேற்றித் தன்மகளைக் கொற்றவன்றன் பாலனுப்ப

தன்னன்னை சொற்படியே தையனல்லா டென்பனசை
தன்னிலுயர் கண்ணப்பத் தார்வேந் தனைக்கூடி

பொற்புமிக வுற்றோருங்கும் புத்திரரைப் பெற்றெடுத்துக்
கற்புடனே யெந்நாளுங் காமவல்லி வாழ்ந்துவந்தாள்

## வாழி

ஆதிமறை யும்வாழி யாறங்க மும்வாழி
மேதினியோ ரும்வாழி விண்ணுலகோ ரும்வாழி
வான்முகிலும் நல்லறமும் மாதவமுந் தாம்வாழி
பான்மைமிகு காவலரும் பாவலருந் தாம்வாழி
வேதியரும் வாழி மிகுவேள்வி யும்வாழி
கோதில் வணிக குலத்தினருந் தாம்வாழி
சீமா னுலகனைத்துஞ் சிர்த்தி மிகப்படைத்த
கோமா னுதாரகுணங் கொண்டவருட் கொண்டலெனும்
தென்பனசைக் கண்ணப்பச் செல்வன் றிருமகனுக்
கின்பமுறப் பெற்றுலகி லெந்நாளும் வாழியவே

சுபம்! சுபம்!! சுபம்!!!

